**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வத்திராயிருப்பு**

முன்னிலை: திரு.மூ. ராமநாதன், B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

வத்திராயிருப்பு.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 23 ம் நாள் திங்கள் கிழமை.

**அசல் வழக்கு எண். 63/2024**

**CNR.No. TNVR25-000995-2024**

1. A. முத்து

2. M. மரியசின்னம்மாள் ..... வாதிகள்

//எதிரிடை//

1. லூ. தனுசு

2. த. துரோபதை .... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, இன்று 23.03.2026 ம் தேதி, இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. முனியாண்டி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. பெருமாள்சாமி அவர்கள் முன்னிலையாகியும், இருந்த நிலையில் இந்நீதிமன்றம் கீழக்கண்டவாறு வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

பிராதின் தபசில் கண்ட சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்து அதை பிரதிவாதிகளிடமிருந்து கோர்ட் மூலம் வாதிகளுக்கு சுவாதீனம் கிடைக்கும் படிக்கும், தபசில் கண்ட சொத்தில் பிரதிவாதிகள் அமைத்துள்ள தகர சார்ப்பை இடித்து அப்புறப்படுத்தி காலிமனையாக கோர்ட் மூலம் வாதிகளிடம் ஒப்படைக்க இந்த பிரதிவாதிகள் மீது வலியுறுத்துக்கட்டளை பிறப்பித்தும், இந்த வழக்கின் செலவு தொகை வாதிகளுக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும் படிக்கும் மற்றும் சமயத்துக்கும், சந்தர்ப்பத்துக்கும் ஏற்ப இதர பரிகாரங்கள் கிடைக்கும் படி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்புவிக்கும் படி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Plaintiff called absent. The counsel for the plaintiff Mr. Ranjith Kumar is present. The counsel for the defendants Mr. Perumal Samy is present. Steps for the 1st plaintiff were not filed. Despite providing sufficient opportunities for filing steps for 1st plaintiff from 26.11.2025, the steps were not filed. Consequently, the suit was dismissed for plaintiffs default in filing steps.

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டடது.

RAMANATHAN MOORTHI

Digitally signed by RAMANATHAN MOORTHI

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வத்திராயிருப்பு.

---

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு.
அசல் வழக்கு எண். 63/2024
தீர்ப்புரை
சீரான / வரைவு
நாள். 23.03.2026

---

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வத்திராயிருப்பு**

முன்னிலை: திரு.மூ. ராமநாதன், B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

வத்திராயிருப்பு.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 23 ம் நாள் திங்கள் கிழமை.

**அசல் வழக்கு எண். 63/2024**

**CNR.No. TNVR25-000995-2024**

1. வத்திராயிருப்பு தாலுகா, சேதுநாராயணபுரத்தில் குடியிருந்து மதுரை சிலைமான் R.M.G. செங்கல் சூளையில் வேலை செய்து வரும், அழுகுமலை குமாரர், கூலிவேலை சுமார் 42 வயதுள்ள A. முத்து.

2. வத்திராயிருப்பு தாலுகா, சேதுநாராயணபுரத்தில் குடியிருந்து மதுரை சிலைமான் R.M.G. செங்கல் சூளையில் வேலை செய்து வரும், A. முத்து அவர்களின் மனைவி, கூலிவேலை சுமார் 39 வயதுள்ள M. மரியசின்னம்மாள். ..... வாதிகள்

//எதிரிடை//

1. வத்திராயிருப்பு தாலுகா, சேதுநாராயணபுரம், R.C. தெருவில் குடியிருக்கும் லூர்து குமாரர், ஆட்டோ ஓட்டுநர் சுமார் 55 வயதுள்ள லூ. தனுசு.

2. வத்திராயிருப்பு தாலுகா, சேதுநாராயணபுரம், R.C. தெருவில் குடியிருக்கும் தனுசு மனைவி, குடும்பத்தலைவி, சுமார் 50 வயதுள்ள த. துரோபதை

.... பிரதிவாதிகள்

பிராதின் தபசில் கண்ட சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்து அதை பிரதிவாதிகளிடமிருந்து கோர்ட் மூலம் வாதிகளுக்கு சுவாதீனம் கிடைக்கும் படிக்கும், தபசில் கண்ட சொத்தில் பிரதிவாதிகள் அமைத்துள்ள தகர சார்ப்பை இடித்து அப்புறப்படுத்தி காலிமனையாக கோர்ட் மூலம் வாதிகளிடம் ஒப்படைக்க இந்த பிரதிவாதிகள் மீது வலியுறுத்துக்கட்டளை பிறப்பித்தும், இந்த வழக்கின் செலவு தொகை வாதிகளுக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும் படிக்கும், வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வழக்கு தாக்கல் நாள்: | 24.02.2023 ம் தேதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஸ்ரீவில்லிபுத்தூரில் தாக்கல் செய்யப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு 06.08.2024 ம் தேதி வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டது . |

| | | |
|---|---|---|
| நீதிமன்றக் கட்டணம்: | a) தபசில் கண்ட சொத்தின் மார்க்கெட் மதிப்பு | ரூ.96,800.00 |
| | தமிழ்நாடு கோர்ட் பீஸ் ஆக்ட் செக் ஷன் 25(a) பிரகாரம் மவுண்ட் | ரூ.2,910.00 |
| | b) வலியுறுத்துக் கட்டளை பரிகாரத்துக்கு உத்தேச மதிப்பு | ரூ.1,000.00 |
| | தமிழ்நாடு கோர்ட் பீஸ் ஆக்ட் செக் ஷன் 27(C) பிரகாரம் மவுண்ட் | ரூ.30.00 |
| | மொத்த மவுண்டு ரூ.2,940.00 கட்டப்பட்டுள்ளது. | |

| | |
|---|---|
| வழக்கு மூலம்: | 23.10.2008, 27.05.2022, 07.07.2022, 31.01.2023 மற்றும் 14.02.2023 ஆகிய தேதிகளில் வத்திராயிருப்பு தாலுகா, சேதுநாராயணபுரம் கிராமத்தில் வைத்து வழக்கு உற்பத்தி. |

இவ்வழக்கானது, இன்று 23.03.2026 ம் தேதி, இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. முனியாண்டி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. பெருமாள்சாமி அவர்கள் முன்னிலையாகியும், இருந்த நிலையில் இந்நீதிமன்றம் கீழக்கண்டவாறு வழங்கும்...

## தீர்ப்பாணை

1. வாதிகளை அழைத்தும் வருகையின்மையின் காரணமாக இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2. செலவுத் தொகை குறித்து உத்தரவு இல்லை.

(இரு தரப்பினரும் செலவு தொகை பட்டியலை தாக்கல் செய்யவில்லை.)

**<u>சொத்து விபரம்</u>**

விருதுநகர் பதிவு மாவட்டம், வத்திராயிருப்பு உப பதிவு மாவட்டம், வத்திராயிருப்பு கிராமம், சர்வே எண். 1204/12 ல் 0.34.0 ம், சர்வே எண். 1205/1 பி–ல் 0–26–0 ம் ஆக 0.60.0 க்கு ஏக்கர் 1 செண்ட் 48 ல் மையம் செண்டு 2 க்கு மால் ஆரோக்கியம் இடத்துக்கும்–மேற்கு, சின்னமுனியம்மாள் இடத்துக்கு – வடக்கு, சடையம்மாள் இடத்துக்கு – கிழக்கு, கிழமேல் பொது நடைபாதைக்கு – தெற்கு இம்மாலுக்குள்பட்ட 872 சதுரடிக்கு 81.01 சதுர மீட்டர் கொண்ட காலிமனையும் சரி. மனை எண். 26 ஆக உள்ளது. தபசில் சொத்தின் மாமூல் நடைபாதைப் பாத்தியமும் சரி.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 23 ம் நாள் என்னுடைய கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

RAMANATHAN MOORTHI

Digitally signed by RAMANATHAN MOORTHI

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வத்திராயிருப்பு.

-----------------------

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு.
தீர்ப்பாணை
அசல் வழக்கு எண். 63/2024,
நாள். 23.03.2026

------------------------